கோபால்ட்—எக்ஸ்—ரே சாதனம் அமைக்கப்படாமல் இருக்கிறது. இதை ஏதோ பக்ரா—நங்கல் திட்டத்தைப்போல் ஒரு பெரிய டெக்னிகல் அட்வைஸ் வாங்கித்தான் செய்யவேண்டும் என்பதைப் போல் இப்படி காலத்தை நீட்டித்துக்கொண்டே போவது சரியானதல்ல. ஆகவே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஒரு காலக்கெடுவை திட்டவட்டமாக நிர்ணயித்து—உடனடியாக இந்த சிகிச்சை சாதனத்தை கோவை நகர மக்களும், மாவட்ட மக்களும் பெறவும்—சென்னைக்கும் வேறு பல இடங்களுக்கும் இதுவரை சென்று புற்றுநோய் சிகிச்சைக்காக அவதிப்பட்ட தொல்லைகளிலிருந்து விடுவிக்க நடவடிக்கை எடுக்கவேண்டு மென்று கேட்டு அதற்கு ஒரு உத்தரவு போடுவாரா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி: பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய பதிலிலேயே குறிப் பிட்டேன். டிசம்பர் 1989-க்குள் கட்டிட வேலை முடிந்துவிடும் என்று கால வரையறையைக் குறிப்பிட்டிருக்கிறேன். நிச்சயமாக அதை விரைவுபடுத்தி செயல்படுத்துவதற்கான ஆணைகள் வழங்கப்படும் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

செங்கற்பட்டு நகரத்தில் பாதாள சாக்கடை.

240—(*வினா எண். 267) **திரு. வீ. தமிழ்மணி:** மாண்பு மிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக் களுக்கு விடையளிப்பாரா—

(அ) செங்கற்பட்டு நகரத்தில் பாதாள சாக்கடை திட்டம் செயல்படுத்தப்படுமா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி: தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்வி எழவில்லை.

திரு. வீ. தமிழ்மணி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, செங்கை நகரத்து மக்கள் காலையில் அருகில் அமைந்திருக்கிற டயர் பேக்டரியின் நாற்றத்தையும் மாலையில் பக்கத்தில் அமைந்திருக்கிற சாராய பேக்டரியின் நாற்றத்தையும் அனுபவித்து மிகுந்த தொல்லைக்கு உள்ளாகி இருக்கிறார்கள்

1989 மே 11]

அந்த மக்களை சாக்கடை நாற்றத்திலிருந்தாவது விடுவிப்பதற்குரிய வகையில் பாதாள சாக்கடைத் திட்டம் அடுத்த நிதி ஆண்டிலாவது எடுத்துக் கொள்ளப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி : மாண்புமிகு தலைவர் அவர்களே, பெரிய பெரிய நாற்றத்தையெல்லாம் தாங்கிக் கொள்ளக்கூடியவர்கள் இந்தச் சாக்கடை நாற்றத்தையும் இன்னும் சிறிது காலம் தாங்கிக் கொள்ளலாம் என்று கருதுகிறேன். இருந்தாலும்கூட இந்த அரசைப் பொறுத்த வரையில் 1 லட்சத்திற்கு மேற்பட்ட மக்கள் தொகை உள்ள இடங்களில் இந்தத் திட்டம் உடனடியாக நடைமுறைப்படுத்தப்படுகிறது. செங்கற்பட்டு நகரத்தின் மக்கள் தொகை 47,324 என்று 1981 ஆம் ஆண்டு மக்கள் தொகைக் கணக்கு சொல்லுகிறது. ஆகவே முன்னுரிமை அடிப்படையிலேதான் பாதாள சாக்கடைத் திட்டம் அனுமதிக்கப்படுகிறது. இருப்பினும் மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் கோரிக்கையை கருதி, வருங்காலங்களில் இதற்கு முன்னுரிமை வழங்கப்படுவதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்படும்.

திரு. பெ. சீனிவாசன் : தலைவர் அவர்களே, பாதாள சாக்கடைத் திட்டம் வாழ்க்கையின் அடிப்படைத் திட்டங்களில் ஒன்று. இந்தத் திட்டத்தை சமீப காலத்தில் அநேகமாக கடந்த அரசு நிறைவேற்றியதாகவே தெரியவில்லை. எந்த நகரத்திலும் கடந்த 10 ஆண்டுக் காலமாக இது நிறைவேற்றப்படாமல் இந்தத் திட்டத்திற்கே விடுமுறை விடப்பட்டிருந்தது. சிவகாசியில் ஒரு லட்சத்திற்கும் மேற்பட்ட மக்கள் தொகை இருக்கிறது. அதோடு சர்க்காருக்கு ஏராளமான வரி கட்டக்கூடிய நகரம் அது. எனவே அந்த நகரத்திற்குப் பாதாள சாக்கடைத் திட்டம் அமுல்படுத்தும் உத்தேசம் உண்டா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நீங்களே வேறு ஊருக்குப் போய்விட்டீர்களே?

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நகராட்சி மன்றம் ஒரு தீர்மானத்தை நிறைவேற்றி அது குடிநீர் வடிகால் வாரியத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டால் அவர்கள் அதை சர்வே செய்து, அதற்குப் பிறகு ஒப்புதல் வழங்குகிறார்கள். ஆகவே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அவருடைய நகராட்சி மன்றத்தின் மூலமாக தீர்மானத்தை

நிறைவேற்றி குடிநீர் வடிகால் வாரியத்திற்கு அனுப்புவாரானால் முறைப்படி அதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

(முற்பகல் 9–20)

திரு. வி. தம்புசாமி : மாண்புமிகு சட்டப்பேரவைத் தலைவர் அவர்களே, சாக்கடை என்பது நகரத்திற்கு அருகாமையிலுள்ள ஆறுகளில் கலந்து தண்ணீர் வீணாவதைத் தடுக்க அரசு துரித நடவடிக்கை எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி : மாண்புமிகு தலைவரவர்களே, இது போன்ற ஏதேனும் குறிப்பிட்ட புகார்கள்—அதாவது ஆற்றில் கலப்பதாக—இருக்குமென்று சொன்னால் அந்த இடத்தில் நடவடிக்கை எடுப்பதற்கு முயற்சிகளை அரசு மேற்கொள்ளும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. இ. புகழேந்தி : மாண்புமிகு தலைவரவர்களே, மாண்புமிகு அமைச்சரவர்கள் பதில் அளிக்கின்றபோது மக்கள் தொகை அடிப்படையில் முன்னுரிமை வழங்கப்படும் என்று குறிப்பிட்டார்கள். கடலூரைப் பொறுத்தவரை அங்கு சுமார் 2 லட்சத்திற்கு மேற்பட்ட மக்கள் தொகை கணக்கில் இருப்பதனால் அந்த நகரத்தில் பாதாளச் சாக்கடை அமைக்கின்ற திட்டம் குறித்து முன்னுரிமை அளிக்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி : மாண்புமிகு தலைவரவர்களே, முன்பு மாண்புமிகு உறுப்பினர் சீனிவாசன் அவர்கள் கேட்ட கேள்விக்கான பதிலிலேயே இதற்கான பதிலும் அடங்கி இருக்கிறது.

குளச்சல் தொகுதியில் கூட்டுக் குடிநீர்த் திட்டம்

241— (*வினா எண். 302) திரு. ஆ. பாலையா : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

குளச்சல் தொகுதியில் மேல கொடுப்பக்குழி, ஆலன்விளை, குழிவிளை, செருப்பன்கோடு, அரசர்கோணம், மேல கட்டிமாங்கோடு, கீழ கட்டிமாங்கோடு ஆகிய ஊர்களுக்கு பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்கும் கூட்டுக் குடிநீர்த் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா ?